**செய்தி வெளியீடு எண் : 2218** **நாள் : 06.11.2023**

**எம். டி. (ஓமியோபதி) – மருத்துவ பட்ட மேற்படிப்புகான சேர்க்கை**
**2023 – 2024ஆம் கல்வியாண்டு**

தமிழ்நாட்டிலுள்ள சுயநிதி ( சிறுபான்மையினர் / சிறுபான்மையினர் அற்ற ) ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களுக்கு, 2023–2024ஆம் கல்வியாண்டிற்கான எம். டி. ( ஓமியோபதி ) – மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள், அனைத்திந்திய ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கு சேர்க்கை பெற அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 2023–ஆம் ஆண்டிற்கான ஓமியோபதி மருத்துவப் பட்டப்படிப்பிற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (AIAPGET 2023 – Homoeopathy) எழுதி, தேவையான தகுதி சதமான மதிப்பெண் பெற்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

**விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை** "www.tnhealth.tn.gov.in." என்ற சுகாதாரத் துறையின் வலைதள முகவரி மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
**விண்ணப்பங்கள் இவ்வாணையரகத்திலோ, தேர்வுக்குழு அலுவலகத்திலோ வழங்கப்படமாட்டாது.** மேலும், அடிப்படைத்தகுதி, தரவரிசை, கலந்தாய்வு அட்டவணை மற்றும் பிற விவரங்களுக்கு "www.tnhealth.tn.gov.in." என்ற வலைதள முகவரியில் தெரிந்துக்கொள்ளலாம்.

- ➢ விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை **07.11.2023 முதல் 17.11.2023 முடிய மாலை 05.00 மணி வரை** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- ➢ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் தபால் / கூரியர் சேவை வாயிலாக பெறவோ அல்லது நேரில் சமர்ப்பிக்கவோ கடைசி நாள்: **17.11.2023 மாலை 05.30 மணி வரை.**
- ➢ விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கவேண்டிய முகவரி: **"செயலர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம், அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை – 600 106."**
- ➢ **விண்ணப்பதாரர்களுக்கு கலந்தாய்வு நேர்முகமாக மட்டுமே நடைபெறும் மேலும் விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்த செலவிலேயே வரவேண்டும்.**
- ➢ **கலந்தாய்வு தேதி, இடம் மற்றும் அனைத்து விவரங்களும்** வலைதள முகவரி மூலமாக மட்டுமே அறிவிக்கப்படும்.
- ➢ **கலந்தாய்வு அன்று நேரில் வரத்தவறியவர்கள் தங்களது வாய்ப்பை இழந்துவிடுவார்கள்.**
- ➢ விண்ணப்பக் கட்டணம்
  1. அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் – 3000/– ரூபாய்
  2. அனைத்திந்திய ஒதுக்கீட்டு இடங்கள் – 1000/– ரூபாய்
  3. நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் – 5000/– ரூபாய்
- ➢ விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணத்தை எஸ்.பி.ஐ. இ–சேவை வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டும்.
- ➢ கடைசி தேதிக்குப்பின் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், தபால் / கூரியர் சேவையினால் ஏற்படும் காலதாமதத்திற்கு தேர்வுக்குழு பொறுப்பாகாது.

**ஆணையர்,**
**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை,**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in